கட்டணங்களைக் கொடுத்துவிட்டு, செல் ஃபோன் பேசுகின்ற வசதிகளும் மற்றும் தொலைக்காட்சி, ரேடியோ வசதிகளும் எல்லா அரசுப் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளில் தொலைக்காட்சி மற்றும் படக்காட்சி வசதிகளோடு, ஒலிநாடா மூலம் இசைப் பாட்டுகள் எல்லாம் ஒலி பரப்பப்படுகின்றன. அதேபோன்று, இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் தனியார் பேருந்துகளுக்கு இணையாக, அந்த அளவுக்கு, தொலைக்காட்சிகள் எல்லாம் ஆங்காங்கு — புதிய பேருந்துகளில், தேவையான பேருந்துகளில் தேவையான அளவுக்கு வீடியோ படக் காட்சிகள் — காண்பிக்கப்படுகின்றன என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வசதியான செல் ஃபோன் வசதியும் செய்யப்படுமா என்பதைக் கேட்டிருக்கிறார்கள். இதைப் பொறுத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், அறந்தாங்கியிலே இருந்து போபால் நகருக்கு எப்போது பேருந்து விட இருக்கிறார் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவு தூரம் போனால் உடம்புக்குத் தாங்காது! (சிரிப்பு)

வினா எண் 92, திரு. டி. மணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

92—

ரப்பர் பூங்கா

***6073–திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2004 ஜூலை 30]

(அ) கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூரில் ரப்பர் பூங்கா ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) இப்பணி எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூரில் ரப்பர் பூங்கா அமைப்பதற்கு, கூட்டு முயற்சியில் செயல்படுத்த, திருவாளர்கள் அக்ஸா டெக்னாலஜீஸ் என்ற நிறுவனம் டிட்கோ நிறுவனத்தின் சகதொழில் முனைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் 8–9–2003 அன்று கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் என்ற கூட்டு முயற்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. நில உரிமையாளர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலத்தைப் பெற, அந்நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், கட்டுமானப் பணிகளுக்கான ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, கட்டுமானப் பணிகள் போன்றவை 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2 ஆண்டுக் காலத்திற்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, ரப்பர் பூங்கா அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியினைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்த அரசு தீர்மானித்திருக்கிறது, அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு, அரசு வழங்குகிற மானியம் எவ்வளவு, எப்போது இந்தப் பணி முடிவடையும் என்கிற தகவல்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2004 ஜூலை 30

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்பகராமன்புதூர் கிராமத்தில் கிட்டத்தட்ட 135 ஏக்கர் நிலப் பரப்பளவில் மொத்த மதிப்பீடு ரூ. 14.52 கோடி செலவில் அமைக்கப்படும் இத்திட்டத்திற்கு ரப்பர் வாரியத்தின்மூலமாக, அரசு மானியமாக 3.55 கோடி ரூபாய் மானியம் அளிக்க, இந்திய அரசின் தொழில் வணிகத் துறையும் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்தை 2004 ஆம் ஆண்டு ஆகஸ்டு - செப்டம்பர் திங்களில் தொடங்கி, 2005 ஆம் ஆண்டு இறுதிக்குள் கண்டிப்பாக முடிப்பதற்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

93—

தொழில் வளர்ச்சி

***7506–திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தை, இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் முன்னோடி மாநிலமாக ஆக்க, தொழில் தொடர்புடைய அனைத்துச் சாராருடனும் தொழில் வளர்ச்சி குறித்துக் கலந்தாலோசிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தை, இந்தியாவின் தொழில் துறை வளர்ச்சியில், முன்னோடி மாநிலமாக ஆக்க இந்த அரசு தொழில் தொடர்புடைய அனைத்துச் சாராருடனும் தொழில் வளர்ச்சி குறித்து அவ்வப்போது ஆலோசித்து நல்ல முடிவுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இவ்வரசு இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் இந்திய வணிகம் மற்றும் தொழில் கழகங்களினுடைய கூட்டமைப்பு போன்ற அமைப்புகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கிறது. மேலும், இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து செயல்பட அம்மாவினுடைய அரசு, தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு செயற்குழுவை அமைத்துச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.